செ.வெ.எண்: 558 நாள்: 08.09.2020

**கும்பகோணம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் நேரில் ஆய்வு**

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் இன்று(08.09.2020) நேரில் ஆய்வு செய்தார்.

கும்பகோணம் சக்கரபாணி படித்துறை திருமஞ்சன வீதியில் நடைபெற்ற காய்ச்சல் கண்டறியும் முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டார். தொடர்ந்து, சுப்பிரமணியபுரம் 1வது தெருவில் வீடு வீடாக கொரோனா நோய்த்தொற்று குறித்த கணக்கெடுப்பு பணி நடைபெறுவதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, கும்பகோணம் அரசு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் முறை, மருந்து கையிருப்பு, இதர நோய் அறிகுறியுடன் வருபவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை ஆகியவை குறித்து கேட்டறிந்தார். மேலும், கும்பகோணம் அரசு மருத்துவமனையில் நடைபெற்றுவரும் புதிய கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து விரைவாக முடித்திடுமாறு அறிவுறுத்தினார். பின்னர், தாராசுரம் காய்கறி மார்க்கெட்டில் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் போதிய இடைவெளி விட்டு கடைகளை திறந்திடுமாறும், முககவசம் அணிதல், சமூக இடைவெளி கடைப்பிடித்தல், கிருமிநாசினி தெளித்தல் ஆகியவற்றை தீவிரமாக கண்காணித்திடுமாறு தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தஞ்சாவூர் மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்று பரவாமல் தடுப்பதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை 7572 நபர்களுக்கு கொரோனா நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 6368 நபர்கள் சிகிச்சை பெற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தற்போது 1081 நபர்கள் நல்ல நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை 1,51,063 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் தொடர்ச்சியாக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, நோய்த்தொற்று உள்ளவர்களை கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் இதுவரை 4729 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 2,21,022 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. மருத்துவ முகாம்களில் சளி, காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் உள்ளவர்களுக்கு ஸ்வாப் பரிசோதனை செய்யப்பட்டு, அதிக அறிகுறிகளுடன் கூடிய கொரோனா நோய்த்தொற்று உறுதி செய்யப்படுபவர்களை தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், மிதமான அறிகுறிகளுடன் நோய்த்தொற்று உறுதி செய்யப்படுபவர்களை கும்பகோணம் மற்றும் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கும், அறிகுறி இல்லாமல் நோய்த்தொற்று உறுதி செய்யப்படுபவர்களை வல்லம் கொரோனா சிகிச்சை மையம், கும்பகோணம் அன்னை பொறியியல் கல்லூரி கொரோனா சிகிச்சை மையம், பட்டுக்கோட்டை குடிசை மாற்று வாரிய கொரோனா சிகிச்சை மையம் ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

மேலும், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் கொரோனா நோய்த்தடுப்பு பணியில் ஈடுபட்டுவரும் களப்பணியாளர்களுக்கு பல்ஸ் ஆக்சிமீட்டர் கருவி வழங்கப்பட்டுள்ளது. களப்பணியாளர்கள் ஒவ்வொரு வீடாக சென்று, நோய்த்தொற்று அறிகுறி உள்ளவர்களை கண்டறிந்து, பல்ஸ் ஆக்சிமீட்டர் கருவி மூலமாக அவர்களின் பிராண வாயு அளவு பரிசோதிக்கப்படுகிறது. அவ்வாறு செய்வதன் மூலம் அறிகுறி இல்லாமல் நோய்த்தொற்று உள்ளவர்களை எளிதாக கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சை அளித்திட முடியும். பொதுமக்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் பல்ஸ் ஆக்சிமீட்டர் கருவியை வைத்திருக்க வேண்டும்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல்ஸ் ஆக்சிமீட்டர் மூலம் பரிசோதனை செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் கொரோனா நோய் குறித்து அச்சப்படாமல், விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். சளி, காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் இருந்தால், அலட்சியமாக விட்டுவிடாமல், தங்கள் பகுதியில் நடைபெறும் மருத்துவ முகாமில் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். பரிசோதனை செய்யாமல் தாமதப்படுத்தினால், உயிருக்கே தீங்கு விளைவிக்கும்.

தமிழ்நாடு அரசால் தற்போது பல்வேறு ஊரடங்கு தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ளது. வழிபாட்டுத் தலங்கள் மற்றும் இதர பொது இடங்களில் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி கடைப்பிடித்தல், கைகழுவுதல் ஆகியவற்றை கட்டாயம் பின்பற்ற வேண்டும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 28.08.2020 அன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் பிளாஸ்மா சிகிச்சை முறை தொடங்கி வைக்கப்பட்டது. பிளாஸ்மா சிகிச்சை முறை மூலம் கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்ட இரண்டு நபர்கள் இதுவரை குணப்படுத்தப்பட்டுள்ளனர். கும்பகோணம் சித்தா சிகிச்சை மையத்தில் 30 நபர்கள் நல்ல நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வட்ட அளவிலான பறக்கும் படை குழுக்கள் அமைக்கப்பட்டு, கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை சுமார் 48,000 நபர்களிடமிருந்து சுமார் 51 லட்ச ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக கொரோனா நோய்த்தொற்று குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடித்தால் மட்டுமே கொரோனா நோய்த்தொற்று எண்ணிக்கையை குறைக்க முடியும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 449 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து சுமார் 7,40,000 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது கடந்த 13 வருடங்களில் அதிகமாக செய்யப்பட்ட கொள்முதல் அளவாகும். தற்போது குறுவை பருவ அறுவடை நடைபெற்று வருவதால், விவசாயிகளின் தேவைக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கிசான் திட்டத்தின் கீழ் ஏதேனும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்ய வருவாய்த்துறை மற்றும் வேளாண்துறை அலுவலர்களை கொண்ட வட்டார அளவிலான ஆய்வுக் குழுக்கள் மூலம் விசாரணை நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில், முறைகேடு ஏதேனும் நடைபெற்றிருந்தால், தொடர்புடைய நபர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முன்னதாக, தஞ்சாவூர் - விக்ரவாண்டி தேசிய நெடுஞ்சாலை பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

இந்நிகழ்வுகளின்போது மருத்துவ பணிகள் இணை இயக்குனர் டாக்டர் ராமு, கும்பகோணம் வருவாய்க் கோட்ட அலுவலர் திரு.விஜயன், கும்பகோணம் நகராட்சி ஆணையர் திருமதி.லெட்சுமி, கும்பகோணம் நகர்நல அலுவலர் திருமதி.பிரேமா, கும்பகோணம் வட்டாட்சியர் திரு.பாலசுப்ரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

செய்திவெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.